மங்கள வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
❋ சோபனா ❋
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 28 வியாழக்கிழமை (10 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 75

இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரீகம்!!
ஆதிக்க ஆடைகளி
சோபிக்க சோபனா
❋ சோபனா ❋
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

# இடை நிலை வகுப்புகள் மூன்றுக்கு பாடங்கள் திடீரென மாற்றப்பட்டன!

## உடனடி அமுலுக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 10

இடைநிலை வகுப்புக்களான ஆண்டு 9, 10, 11 ஆம் வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் போதிக்கப்படும் பாடங்கள் திடீரென மாற்றப்பட்டிருக்கின்றன.

1994 இலிருந்து உடனடியாக பாடங்களை மாற்றுவது சம்பந்தமான சுற்று நிருபம் ஒன்று யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய கல்லூரி ஒன்றுக்கு கிடைத்திருக்கிறது.

கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளரும் கல்வி, கலாசார அமைச்சின் மேலதிக செயலாளருமான ஆர். ஆ.ரி. அலஸ், கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் காமினி அமரசிங்க ஆகியோரினால் அனுப்பப்பட்ட இந்தச் சுற்று நிருபம் தனிச் சிங்களத்தில் உள்ளது. ஜனவரி 20 ஆம் திகதியிடப்பட்டு அனுப்பப்பட்ட இந்தச் சுற்று நிருபம் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

இந்தச் சுற்றுநிருபம் தொடர்பாக அவதானிப்பு ஏதும் இருப்பின் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் அதனைத் தெரிவிக்கும்படி சம்பந்தப்பட்ட தேசிய கல்லூரி அதிபர் கேட்கப்பட்டிருக்கிறார்.

### முச்சந்தி முரலி



அரசியலமைப்பு திட்டத்தை அடிக்கடி மாற்றுவது போல கல்வித் திட்டத்தையும் மாற்றுவதில் உவர்கள் அசகாய சூரர்கள்......

ஏனைய பாடசாலைகளுக்கு வடக்கு, கிழக்கு மாகாண சபை ஊடாக இந்தச் சுற்று நிருபம் அனுப்பப்படும் என்றும் கருதப்படுகிறது.

தற்போது ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மூன்று வருடங்கள் அதற்காக கல்வி பயிலுகிறார்கள். ஆனால் எந்த நாட்டிலும் இத்தகைய பரீட்சைக்கு மூன்று வருடங்கள் கல்வி போதிக்கப்படுவதில்லை. எமது பாடத்திட்டத்தை சமச்சீர் (Balanced Syllabus) செய்யும் நோக்குடன் புதிய பாடத்திட்டம் 1994 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது. — இவ்வாறு சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் —

புதிய பாடத்திட்டம் இந்த

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் புலிகள் ஊடுருவி தாக்குவராம்!

### பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

கொழும்பு, பெப். 10

வவுனியா நகருக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவி தாக்குதல் மேற்கொள்ளலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மார்ச் முதலாம் திகதி நடக்கும் வவுனியா நகரசபைத் தேர்தலை குழப்ப விடுதலைப் புலிகள் ஊடுருவலாம் என்றும் —

அதற்காக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக பொலிஸாரும், இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் — கடைவீதிகளிலும், நகரப் பகுதிகளிலும் வீதிச் சோதனைகள், அனுமதிப்பத்திரச் சோதனைகள் அடிக்கடி இடம்பெறுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கேந்திர அரச நிலையங்கள், பாதுகாப்பு நிலைகள், முக்கிய பிரமுகர்கள் வீடுகள், அலுவலகம் ஆகியவற்றுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஓ-3)

## சுதந்திர தின நிகழ்ச்சிக்கு ஹேமாவுக்கு அழைப்பில்லை!

கொழும்பு, பெப். 10

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடந்த உத்தியோகபூர்வ சுதந்திரக் கொண்டாட்டங்களுக்கு மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவி ஹேமாவை அழைக்காதது பலருக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

அழைக்கப்படுவோர் பட்டியலில் ஹேமாவின் பெயர் இல்லை. அதனால் அவர் அழைக்கப்படவில்லை என்று உள்நாட்டு அமைச்சு அதிகாரி ஒருவர் சொன்னார்.

இந்த அழைக்கப்படுவோர் பட்டியலில் முன்னாள் பிரதமர் டபிள்யு. தகநாயக்கா மற்றும் மூன்று முன்னாள் சபாநாயகர்கள் கூட இடம் பெறவில்லை.

தம்மை அழைக்காதது குறித்து கருத்து வெளியிட ஹேமா மறுத்து விட்டார் என்று ''சண்டே ரைம்ஸ்'' செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

### மட்டு. உள்ளூராட்சி தேர்தல்:

## ஐ.தே.க. வேட்பாளர்களுக்கு தமிழ் குழுக்கள் பயமுறுத்தல்!

கொழும்பு, பெப். 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் ஐ.தே. கட்சி வேட்பாளர்கள் சிலருக்கு அங்குள்ள தமிழ்க்குழுக்கள் கொலைப் பயமுறுத்தல்களை விடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரெலோ, புளொட், ஈ.பி. ஆர். எல். எவ், ஈரோஸ் ஆகிய தமிழ் குழுக்களே மேற்படி கொலைப் பயமுறுத்தல்களை கடித மூலம் ஐ தே. கட்சி வேட்பாளர்களுக்கு அனுப்பியுள்ளன என்றும், பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஓ-6)

## கிழக்கில் தேர்தல் பிரசாரம்; ஐ.தே.க. மேடையில் அனுரா!

கொழும்பு, பெப். 10

கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற ஐ.தே. கவின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உயர்கல்வி அமைச்சர் திரு. அனுரா பண்டாரநாயக்காவும் கலந்து கொண்டார்.

கடந்த சனிக்கிழமை அம்பாறைக்கு விஜயம் செய்த அவர் சம்மாந்துறை, சாய்ந்தமருது ஆகிய இடங்களில் நடைபெற்ற ஐ. தே கட்சிக் கூட்டங்களில் உரையாற்றினார்.

கடும் மழைக்கும் மத்தியில் கூட்டங்கள் நடைபெற்றன. (ஓ-5)

## 7 பொலீஸ் மினி முகாம்கள் மன்னாரில் அகற்றப்பட்டன

கொழும்பு, பெப். 10

மன்னாருக்கும், தலைமன்னாருக்கும் இடையில் உள்ள ஏழு பொலீஸ் மினி முகாம்கள் திடீரென அகற்றப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுக்கவும், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குமாக அமைக்கப்பட்டிருந்த இந்த மினி முகாம்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே அகற்றப்பட்டன என்று பொலீஸ் தலைமையகம் தெரிவித்தது.

இதற்கிடையில் —

மன்னாரிப் பகுதியில் இரவு நேரங்களில் ஹெலியின் நோட்டம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

# இலங்கையில் அமைதி ஏற்பட ஐ.நா. செயலர் முயற்சி தேவை

### பதினேழு சர்வதேச பொது அமைப்புகள் கோரிக்கை

கொழும்பு, பெப். 10

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தமிழர் தாயகம் உள்ளது என்பதற்கு மதிப்புக் கொடுக்கும் வகையிலும்—

தமது அரசியல் அந்தஸ்தை சுதந்திரமாக நிர்ணயிக்கும் உரிமை தமிழர்களுக்கு உள்ளது என்பதை அங்கீகரிப்பதன் ஊடாகவும்—

இலங்கையில் அமைதியைக் கொண்டு வருவதற்கு ஐ நா. செயலாளர் நாயகம் தன்னுடைய நல்லெண்ண முயற்சிகளைப் பயன்படுத்தவேண்டும்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 50 ஆவது கூட்டத் தொடரில் 17 சர்வதேச பொது அமைப்புக்களால் விடுக்கப்பட்ட கூட்டறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக இயங்கும் 17 அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களால் இலங்கை நிலைமை தொடர்பாக அந்த அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் இடம்பெறும் ஆயுதச் சண்டையும், மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்ச்சியாக மீறப்படுவதும் எமக்கு ஆழ்ந்த கவலையைத் தந்துள்ளன.

1987 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கை தொடர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### பயங்கரவாதப் பிரச்சினையே நிலவுகிறது:

# வெளிநாட்டுத் தூதரகங்கள் டி.பியின் கூற்றை ஏற்கவில்லை

கொழும்பு, பெப். 10

இலங்கையில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல; பயங்கரவாதப் பிரச்சினையே என்ற ஜனாதிபதியின் நிலைப்பாட்டைக் கொழும்பில் உள்ள பெரும்பாலான வெளிநாட்டுத் தூதரகங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

''அமைதிப் பேச்சுகள்'' என்ற தலைப்பில் சண்டே ரைம்ஸ் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

இலங்கைக்கு பெருமளவு உதவி வழங்க பிரிட்டன் அக்கறையாக இருக்கிறது என்று கூறிய பிரிட்டிஷ் தூதர் ஜோன் எவ்பீல்ட், இலங்கையில் யுத்தம் நடப்பதால் இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகள் இலங்கையை விட்டு வியட்னாம் போன்ற நாடுகளுக்கு செல்வதாகக் கூறியிருக்கிறார்.

யுத்தம் நடைபெறாதிருப்பின் இலங்கை புதிய கைத்தொழில் நாடு என்ற அந்தஸ்தைப் பெறுவதற்காக டொலர்களையும் ஸ்டேர்லிங்குகளையும் யென்களையும் இந்த நாட்டுக்குள் கொண்டு வர வெளிநாட்டவர்கள் அக்கறையாக உள்ளனர்.

இத்[illegible]

நிறுத்தப்பட வேண்டும் அமைதி திரும்ப வேண்டும்.

— இவ்வாறு ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## படையினர் சூடு; மீனவர் காயம்

யாழ்ப்பாணம்; பெப். 10

மண்டைதீவு படையினர் நேற்றிரவு 9 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மீனவர் ஒருவர் தலையில் படுகாயமடைந்தார்.

இதனை அடுத்து தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் கரைக்குத் திரும்பினர்.

குருநகரைச் சேர்ந்த செபஸ்தியான் மரியதாஸ் (சிறில் - வயது 35) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் யாழ். ஆ[illegible] அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-3)

## மன்னம்பிட்டியில் கான்ஸ்டபிள் பலி

கொழும்பு, பெப். 10

சுதந்திர தினத்தன்று மன்னம்பிட்டியில் விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் திலகரத்ன என்ற பொலீஸ் கான்ஸ்டபிள் கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவர் களுத்துறையைச் சேர்ந்தவர்.

விடுதலைப் புலிகள் மன்னம்பிட்டிக்குள் ஊடுருவியுள்ளனர் என்ற தகவலைத் தொடர்ந்து பொலீஸார் மறைந்து இருந்து கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தபோது தான் விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

### 1978 இல் அவரே கொண்டுவந்தது:

## விகிதாசார தேர்தல் முறை; குறை கூறுகிறார் ஜே.ஆர்.

கொழும்பு, பெப். 10

இன்றைய விகிதாசார தேர்தல் முறையைவிட முன்னைய தொகுதி வாரியான தேர்தல் முறையே சிறந்ததாகும். அனைத்துக் கட்சிகளும் இதை ஏற்றுக்கொண்டால் மீண்டும் அந்த முறையைக் கொண்டு வரலாம்.

இப்படிக் கூறுகிறார் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா.

கடந்த ஞாயிறன்று கொழும்பில் நடந்த வைபவம் ஒன்றில் கலந்து பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தேர்தல்களில் தொகுதி ரீதியாக மக்கள் வாக்களிக்கும் முறையை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று பலர் பொது மேடைகளிலும், தனிப்பட்ட முறையிலும் என்னுடன் பேசி வருகின்றனர்.

இன்று தமது எம். பி. யார் என்பதைக் கூட மக்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர். எனவே பழைய தேர்தல் முறையே சிறந்தது என்றார்.

ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில்— 1978 ஆம் ஆண்டில் — புதிய அரசமைப்பு சட்டத்தின் மூலமே விகிதாசார தேர்தல் முறை கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஓ-3)

## கிரேக்க கப்பலிலிருந்து கைதான தமிழர்கள் மறியலில்

கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்ற கிரேக்கசரக்குக் கப்பல் ஒன்றில் கைது செய்யப்பட்ட 14 தமிழ் இளைஞர்களும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு நீதிவானின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

எஸ். சண்முகராசா, என். எப். சேவியர், பி.எஸ். லோகராஜா, என்.பி. நடேசபிள்ளை, வி. பேரின்பலிங்கம், டி.என்.ஏ.தேவதாஸ், வி. பி. தோபதி, பி. பி. புன்னே, பி.பி.ஏ. அழகேந்திரா, எஸ். நடேசன், ரீ. ராஜலிங்கம், பி. பஞ்சலிங்கம், ஜே ச. கமிலஸ் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் ஆவர். (ஓ-3)

## 'மக்களை வாக்களிக்குமாறு இராணுவம் தூண்டும்!

### இப்படிக் கூறுகிறார் இணைப்பதிகாரி

கொழும்பு, பெப். 10

கிழக்கில் நடக்கவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களில் வாக்களிக்கப் பயந்து வீடுகளில் முடங்கிக் கிடக்கும் மக்களை வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்குமாறு உற்சாகப்படுத்தும் நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபடும்.

— இப்படிக் கூறியுள்ளார் கிழக்கு பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் ரொகான் குணவர்த்தன.

கடந்த திங்களன்று மட்டக்களப்பு செயலகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் தலைவர்களும், கபேச்சைக் குழுத் தலைவர்களும் படையினரின் அடாவடித்தனம் குறித்து புகார் தெரிவித்தனர்.

தேர்தலில் இராணுவம் நேரடியாக தலையிடாது என்றும் —

பொலீஸாரே வாக்குச் சாவடிகளில் பணிபுரிவர் என்றும் — இணைப்பதிகாரி சொன்னார்.

வாக்குச்சாவடிகளில் இருந்து 400 மீற்றர் தொலைவில் இராணுவத்தினர் நின்று பாதுகாப்பு வழங்குவர் என்றும் — வ'கரையில் மட்டும் இராணுவம் நேரடியாக சாவடியைப் பாதுகாக்கும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-3)

### யாழ். வந்து திரும்பிய

## கத்தோலிக்க ஆயர் குழுவினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, பெப். 10

யாழ். வந்து திரும்பிய கத்தோலிக்கத் திருச்சபை அதிமேற்றிராணியார் நீக்கிலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ தலைமையிலான குழுவை ஜனாதிபதி விஜேதுங்கா சந்தித்தார்.

பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு தயாராக இருப்பதாக அப்போது ஜனாதிபதி கூறினார்.

இதற்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும் இக்குழு சந்தித்து பேச்சு நடத்தியிருந்தது.

## வவுணதீவில் மாணவர் கைது; தாய் மாரடைப்பால் மரணம்

கொழும்பு. பெப். 10

மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தில் உள்ள வவுணதீவுப் பிரதேச செயலகப் பிரிவில் கடந்த வாரம் பாதுகாப்புப்படையினர் சுற்றிவளைத்துத் தேடுகல் நடத்திய போது மாணவர் ஒருவரைக் கைது செய்தனர்.

தனது மகனைப் பாதுகாப்புப்படையினர் கைது செய்ததைத் தாங்க முடியாத தாய் அந்த வேளையிலேயே மகன் முன்னிலையிலேயே மாரடைப்பால் மரணமானார்.

ஆனாலும் படையினர் அந்த மாணவனை கைது செய்து முகாம் கொண்டு சென்றனர்.

மற்றொரு மாணவனும் அன்றைய தினம் கைது செய்யப்பட்டார். (ஓ-3)

## நரோமா வரும்

பல்கலைக்கழக மாணவர்கள், அரச ஊழியர்களுமாக 125 பயணிகளுடன் நரோமா கப்பல் நாளை வெள்ளி காலை காங்கேசன்துறைக்கு வந்துசேரும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இன்று மாலை திருகோணமலையில் இருந்து புறப்படும் இக்கப்பல் காங்கேசன்துறையில் பயணிகளை இறக்கிவிட்டு, கொழும்பு செல்லும் பயணிகளை திருகோணமலைக்கு ஏற்றிச் செல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பொமனேரியன் நாய் (பிறவுண் 1½ வயது ஆண்) அத்துடன் வெள்ளை, பிறவுண் குட்டிகள் (பூச்சி நீக்கியது) விற்பனைக்கு உண்டு. மற்றும் இறை இரக்கப் பக்தி ஜெபப் புத்தகங்களும் உண்டு. தொடர்பு: 392, பிரதான வீதி (செபஸ்தியன் சந்தி), யாழ்ப்பாணம். (29348)

## தேவை

தேவன்ஸ் தயாரிப்புக்களான பற்பொடி, நீலம், சீயாக்காய் பவுடர், கச்சான் அல்வா மற்றும் இனிப்பு வகைகள் சைக்கிளில் வியாபாரம் செய்யக்கூடிய ஆண்கள் தேவை. ஜெயலட்சுமி இன்டஸ்றீஸ், பாடசாலை வீதி, ஆறுகால்மடம். (29328)

பற்பொடி, நீலம், சீயாக்காய் பவுடர் ஒட்டுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. ஜெயலட்சுமி இன்டஸ்றீஸ், பாடசாலை வீதி, ஆறுகால் மடம் (29327)

இறைச்சிக் கோழிகள் தேவை. உடன் தொடர்பு கொள்க: நல்லூர் வீடியோ சென்ரர். 19, முருகேசர் ஒழுங்கை. முத்திரைச் சந்தையடி, நல்லூர் (29305)

## வெளிவந்துவிட்டது

பாலர் வகுப்புகளுக்கான அஷ்டலக்ஷ்மி, பாலர் தமிழ், ABC Book விற்பனைக்கு வந்துவிட்டது. ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம், சிவா பிறிண்டேர்ஸ், கைதடி. (6956)

## நாளை சனிமாற்றம்

(11-2 94) சனி மாற்றம் ரூபா 10/- புதிய வெளியீடு எங்கும் விற்பனையாகின்றது. T. V. பாலா சோதிட நிலையம், புத்தகசாலை, இணுவில். (29353)

## திருத்த வேலைகள்

சகல மணிக்கூடுகள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும், டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் சுப்பர் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-7215)

## இலவச திருமண சேவை

31 வயது, சுத்ததரை, செவ்வாய் 1, கனடா பல்கலைக் கழகத்தில் Electronic Engineer முடித்து தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் செய்து அழைக்கலாம். தொடர்பு: விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி (29303)

## தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்குகந்த நல்லரக தென்னம் நாற்றுக்கள் சாதாரணம், செவ்விளனி, வத்தாவி இனங்கள் குறுகிய காலத்தில் பயன்தரக் கூடியவை விற்பனைக்குண்டு. மு. காங்கேசு ஐயா கடையடி, மீசாலை (6953)

## தவறிவிட்டது

1-2-94 அன்று நல்லூருக்கும், கிளாலிக்குமிடையில் பிறவுண் கலர் கொண்ட சிறிய கைப்பையுடன் ஒரு தொகைப் பணமும் சிறு பிள்ளைகளின் காதுமாட்டியும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திருமதி கு. மனோகரன், போர்க்கால் வீதி, சிவபாதம் மில், உடுப்பிட்டி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (29349)

## அளவெட்டியில் சின்ன வெங்காயம் அமோக விளைச்சல்

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். குடாநாட்டில் சின்ன வெங்காயத்தின் உற்பத்தி டிசம்பர் மாதம் பெய்த மழையினால் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் அளவெட்டிப் பகுதியில் சின்ன வெங்காயம் பெரும் விளைச்சலை கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சின்ன வெங்காயத்துக்கு இருந்து வரும் தட்டுப்பாடு ஓரளவு நீங்கி வருவதாக யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார். (இ-17)

## இலங்கலைஞர் மன்றம் 14ஆவது ஆண்டு இசைவிழா

இடம்: மன்றக் கலாமண்டபம்

காலம்: 12 - 02 - 1994 — 26 - 02 - 1994

தினமும் பிற்பகல் 4.00 மணி — இரவு 10 00 மணி

மேற்படி விழாவில் நாதஸ்வர, தவில், வாய்ப்பாட்டு, வயலின், வீணை, வேணுகானம், மிருதங்க இசை, வில்லிசை, கதாப்பிரசங்கம, பரத நாட்டியம் போன்ற பலதரப்பட்ட இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்

இளங்கலைஞர்களும், முன்னணிக்கலைஞர்களுமாக 500க்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்குகொள்வர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-மேற்படி மன்றத்தினர்.

(சி-7194)

## "பேபி" நாலக வளர்ச்சி நிதிக்கான கலை நிகழ்ச்சிகள்

இடம்: இளங்கலைஞர் மண்டபம், நல்லூர்

காலம்: 10 — 02 — 1994 மாலை 6-30 மணி (இன்று)

நிகழ்ச்சிகள்

மங்கள விளக்கேற்றல்

கே. சௌந்தரராஜன் - [K. S. R. போட்டோஸ் தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்]

வீ. சிறிதரன் [ஸ்ரீ அமலா நகை மாளிகை, யாழ்ப்பாணம்]

★ புல்லாங்குழல் இசை
★ செம்பு நடனம்
★ அஞ்சலி நடனம்
★ அழியாத செல்வங்கள் நாடகம்

✲ பட்டி மண்டபம் ✲

★ தேசிய எழுச்சியை பெரிதும் ஊக்குவிப்பது ★

● மண்பற்றே ● மொழி உணர்வே

| | |
|---|---|
| க. சலாகரன் | த. சிவகுமாரன் |
| எஸ் கே பிரபாகரன் | இ ஸ்ரீகரன் |
| இ ஜெகன் | காரை. எஸ். கெங்கா |

நடுவர்

நயினை கவிஞர் நா க. சண்முகநாத பிள்ளை (அதிபர், யா/மத்திய கல்லூரி)

அன்பளிப்பு:- 50/-. 20/-. 10/- (மண்டப வாயிலில்)

அனைவரும் திரண்டு வருக

ஒளி அமைப்பு:- மனோ லைட்., கோப்பாய்.

ஒலி அமைப்பு:- லோகேஸ் ஒலி அகம். அரியாலை.

ஜெயா அழகு சாதன மாளிகை
177 A. மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

றெனி மூக்குக் கண்ணாடி அகம்,
288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

பேபி நாலகத்தினர்,
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (6959)

## அனுதாப அலைகள்

### அமரர் க. சி. குலரத்தினம்

(பல்கலைப் புலவர்)

எங்கள் ஊர்மக்களின் சிறந்த நண்பரும், எம் மூதாதையர்களின் நன்கொடைகளையும், நற்பண்புகளையும் அறிந்து விதந்து கூறி வந்தவரும், பரமேஸ்வராக் கல்லூரியில் மாணவராக பயின்ற காலத்தில் தமிழில் சிறந்த அறிவு காரணமாக ''அகஸ்தியர்'' என்று அன்பாக அழைக்கப் பெற்றவரும், தமிழ், ஆங்கிலம், ஆரியம் முதலிய பாஷைகளில் விசேஷ அறிவு, ஆற்றல் பெற்றிருந்தமையினால் ''சிவதர்ம வள்ளல்'' க. கனகராசா அவர்களுடன் இணைந்து பல அரிய நூல்களை மறுபிரசுரம் செய்தும், வெளியிட்டவரும், தூய்மையான மனோபலமுள்ளவரும், எடுத்த நன் முயற்சிகளை பக்தி சிரத்தையுடன் செய்து முடிப்பவருமாகிய அன்னார் எம்மிடருந்து மறைந்து விட்டார். அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

- திருநெல்வேலி வாழ் அன்பர்கள்.

[29346]

## வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்க அஞ்சலி

இலக்கணமே வரலாறே இலக்கியமே சிவநெறியே
துலக்கமுற விரித்துரைக்கும் சொல்லாளன் பேரறிஞன்
மலைநிறைகோல் மலர்நிலத்தை மானும்நல்-
லாசிரியன்
கலைக்குரிசில் கனிந்தகுல ரத்தினத்தை இழந்தனமே.

நாடும்பல் கலைப்புலவர் நல்லனவே நினைத்திடுவார்
பீடுபெறப் பேசுவன செய்வனவும் பெரியனவே
கூடுவிட்டு விரைந்திந்தக் குவலயத்தை நீத்தசெயல்
ஈடுசெய்ய முடியாத இழப்பிதுபோல் வேறுண்டோ?

(சி/7305)

## பேரிழப்பு

### மூதறிஞர் க. சி. குலரத்தினம்

தமிழறிஞரும், சைவப் பெரியாருமாகிய க. சி. குலரத்தினம் அவர்களின் மறைவு சைவ உலகுக்கு பேரிழப்பாகும்.

அன்னாருக்கு எங்கள் அஞ்சலிகள் உரித்தாகுக!

இந்து வாலிபர் சங்கம்,
வட்டுக்கோட்டை.

(29347)

## பல்கலைப் புலவர் உயர்திரு க. சி. குலரத்தினம் அவர்களுக்குக் கண்ணீர் அஞ்சலி

ஈழ நாட்டின் தமிழ்க் கல்வி மரபின்
ஆழத்தை, அகலத்தை
அது;
வேர் விட்டு விருட்சமான
வரலாற்றை,
விழுது விட்டு படர்ந்த
வரன் முறையை,
நூலாக, உரையாக
நுவன்று சென்ற தமிழ் முனியே!
எமது சிற்பாலய நிறுவுநர்
ஆறுமுகம் அவர்களோடு
உவப்பதி தலைகூடி
உறவாடியவரே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை வேண்டுகிறோம்.

ஆறுமுகம் சிற்பாலயம்

காளிகோவிலடி,
திருநெல்வேலி. (29367)

## காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி

மாவடி, வட்டுக்கோட்டை

### பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்

கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் 13 - 2 - 94 ஞாயிறு மு.ப. 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கி. சிவமணி
செயலாளர்

[29369]

## 10ஆம் ஆண்டு நினைவு நாள்

நயினாதீவு இரண்டாம் வட்டாரம்

### திருமதி சின்னப்பு சின்னம்மா

(10 — 02 — 1994)

அன்பாய் வளர்த்தெடுத்து ஆளாக்கி விட்டுஎமை
நன்றாயும் வாழ வழி செய்த - எம்தாயே!
மறைந்துபத் தாண்டெனினும் இன்றுமே -
உன் நினைவு
உறங்கையிலும் எம்நெஞ்சில் உண்டு.

- குடும்பத்தினர்.

தாவடி, கொக்குவில். [29312]

## கண்ணீர் அஞ்சலி



### க. சி. குலரத்தினம்

தண்டமிழும் நாவிழந்தாள்
சைவம் உயர் துணை இழக்க
வெண்டரள அலை சுமந்து
விங்கொலிகுழ் யாழ் நரம்பின்
பண்தளரக் க. சி கு.
பண்டிதனார் இறைமலர்த்தாள்
கண்டுயரச் சென்றதினால்
கலங்குது எம் களஞ்சியமே.

சு. சண்முகதாஸ்,
குகன் களஞ்சியம்,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

(29350)

## இதய அர்ச்சனை

இன்று அக்கினியுடன் சங்கமமாகும்
நமது காலத்தில் வாழ்ந்த நாவலன்
சமயக் காவலன், பல்கலைப்புலவன்
மறைந்த மூதறிஞர்

க. சி. குலரத்தினம் அவர்களின்

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

வண்ணை. ஸ்ரீ வீரமகாளி அம்மன் ஆலய
பரிபாலன சபையினர்

[29361]

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் க சி. குலரத்தினம்

யாழ். பொதுசன நூலகத்தின் வளர்ச்சிக்காக அதன் ஆரம்பகாலம் முதல் தமது இறுதிநாள் வரை அரும்பாடு பட்டவரும், யாழ்ப்பாண மாநகரசபையின் சகல பொது வைபவங்களிலும் முக்கிய பங்கேற்று அறிவும், ஆன்மீகமும் கலந்த அறவுரைகள் பலவற்றை எமக்கு வழங்கியவரும், எம் மக்களின் கல்வியறிவுக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தவருமான நற்றமிழ் வித்தகர். மூதறிஞர் க. சி. குலரத்தினம் அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும்.

கண்ணீர் மலர்களை அவருக்குக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் மாநகரசபை
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
யாழ். மாநகரசபையின்
சைவசமய விவகாரக் குழு,
யாழ் பொதுசன நூலக
ஆலோசனைக் குழு,
யாழ். பொதுசன நூலக
ஊழியர் நலன்புரிச் சங்கம்.

(சி/7310)

## அஞ்சலிகள்

### க. சி. குலரத்தினம்

சைவப் பேரறிஞரும், சைவச் சீலருமான மூதறிஞர் க. சி. குலரத்தினம் அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகள்

எமது ஆலயத்திற்கு தாம் அன்பளித்த மணியின் நாத வெள்ளத்தில் தினமும் நாதனைக் கண்ட அந்த ஞான வள்ளலின் ஆன்மா ஞானவைரவர் கழலினைப் பற்றிப் பேறுபெற்று உய்ய இறைஞ்சுகிறோம்.

எம். தனபாலன் ஆசிரியர்
பரிபாலன சபையினர்,
ஞானவைரவர் ஆலயம்.

அம்மன் வீதி,
கந்தர்மடம்.

(29365)

## கண்ணீர்ப் பூக்கள்

பல்கலைப் புலவரும், மூதறிஞரும்,
பழந்தமிழ் மரபோடு பாங்குமிகு சைவ சித்தாந்த
உணர்வும், அறிவும் கைவரப் பெற்றவருமான,

க. சி. குலரத்தினம்
அவர்கள்

மறைவால் வருந்தி உளம் உருகி வழங்கும்
கண்ணீர் அஞ்சலி!

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

முத்துத்தம்பி மகா வித்தியாலயம்,
திருநெல்வேலி. (29351)

## உ

## திருமண வரவேற்புபசாரம்

| மணமகன் | மணமகள் |
|---|---|
| சிரஞ்சீவி | சௌபாக்கியவதி |
| முரளீதரசர்மா | மஞ்சுளா கௌரி |
| (கும்பிளாவளைப் பிள்ளையார் கோயில்) | |

இடம்: மணமகன் இல்லம்

காலம்; வெள்ளிக்கிழமை (11 — 02 — 1994)
மாலை 4-00 மணி - 9-00 மணி வரையும்
சனிக்கிழமை (12 — 02 — 1994) முழுநாளும் நடைபெறும்

அத்தருணம் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்:

சோ வெங்கடேஸ்வரக் குருக்கள் தம்பதிகள்,
திருமதி சீதாலட்சுமி அம்மா.

வரவேற்பாளர்கள்;

இ. சோமசுந்தரேஸ்வரக்குருக்கள் தம்பதிகள்,
இ. விஸ்வேஸ்வரக்குருக்கள் தம்பதிகள்,
இ. சூரியப்பிரபாகரக்குருக்கள் தம்பதிகள்

கும்பிளாவளைப் பிள்ளையார் கோயில்,
அளவெட்டி. (29315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## மேலும் மோசமாகும்

தமிழர் பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கம் மனக் குழப்பம் அடைந்த நிலையில் காணப்படுகின்றது.

மிகக் குறிப்பாக ஜனாதிபதி விஜேதுங்கா நிலை தடுமாறியவராக, நேரத்துக்கு நேரம் வெவ்வேறு கருத்துக்களை வெளியிடுபவராக, வெவ்வேறு அறிவிப்புகளை செய்பவராகச் செயற்படுகிறார்.

இத்தகைய ஒரு கலங்கிய நிலையில் தான், அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனை இன்றிப் பேசுவதற்கு தயார் என்ற தகவலும் —

யாழ்ப்பாணம் வந்து திரும்பிய கத்தோலிக்க திருச்சபைத் தூதுக்குழுவினர் ஜனாதிபதியைச் சந்தித்தபோது அவர், இனநெருக்கடியைத் தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகளுடன் ஒட்டுமொத்தமான தீர்வு ஒன்று குறித்து பேச்சுவார்த்தை நடத்தவிருப்பம் தெரிவித்தார் என்ற தகவலும் —

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஒரு நிபந்தனையாக விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டியதில்லை என இராணுவத் தளபதி கூறிய தகவலும் — வெளிவந்து கொண்டிருக்கின்றன.

சமாதானத்தை விரும்புவது போன்ற இந்தத் திடீர் அறிவிப்புகளை அரசியல் தலைவர்களும், இராணுவத் தலைவர்களும் வெளியிடுவது பல நோக்கங்கள் கருதியாகும்.

அடுத்த மாதம் முதலாம் நாள் கிழக்கில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மக்களுக்குப் பிரச்சினை எதுவும் இல்லை. அந்தப் பிரதேசம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இருக்கிறது என்று வெளி உலகத்துக்குக் காட்டுவதே தேர்தலை நடத்துவதன் நோக்கம்.

பெரியதோர் திட்டத்துடன் நடத்தப்படும் அந்தத் தேர்தலுக்கும் முட்டுக்கட்டைகள் வரலாம் என்ற அச்சம் அரச உயர் மட்டத்துக்கு உண்டு.

எனவே அப்படி ஒரு நிலைமை உருவாகாமல் தடுக்கும் நோக்குடனேயே பேச்சுவார்த்தைக்குத் தயார். ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டியதில்லை என்ற மயக்கு மொழிகள் எல்லாம் தாராளமாக அள்ளி வீசப்படுகின்றன.

மேலும் இந்த மயக்குமொழிகளும், பசப்பு வார்த்தைகளும், ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ. நா. மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் ஏற்படக் கூடிய பாதிப்புகளை தணிப்பதற்காகவும் ஆகும்.

அதே போல, இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தில், இனப்பிரச்சினை சம்பந்தமாக முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்று காட்டுவதற்கும் அரசு தனது சமாதான விருப்பத்தைப் பயன்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

இவை எல்லாவற்றையும் விட இவ்வருடத்தில் நடக்க இருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு வடக்கு - கிழக்கு பிரச்சினை சம்பந்தமாக ஓர் இணக்கம் காணப்பட்டு விட்டது என்று காட்டி, யுத்தத்தைத் தொடர்ந்தால் சலிப்பும் விரக்தியும் அடைந்துள்ள சிங்கள வாக்காளர்களைச் சாந்தப்படுத்தும் தந்திரமே இந்த ஆசை வார்த்தைகள் எல்லாம். இப்படி ஒரு இடைக்கால நாடகத்தை ஆடினால் வடக்கு-கிழக்கிலும் ஜனாதிபதி தேர்தலை நடத்தலாம் என்று விஜேதுங்கா கணக்குப் போட்டிருக்கிறார்.

ஆயினும்—

அரசு தான் நேரடியாகக் கையாளாமல் இரண்டாம் பேர்வழிகள் மூலம் போடும் பொறிக்குள் விடுதலைப் புலிகள் பிடிபடாவிட்டால், 1956 ஆம் ஆண்டு காலப் பகுதியின் இனத்துவேசத்தை விஞ்சும் விதத்தில் இனவாதம் கக்குவது என்பது விஜேதுங்காவின் திட்டமாக உள்ளது. உடுநுவரப் பேச்சு அதனையே எடுத்துக் கூறுகிறது. அவரின் இந்தப் போக்கு நிலைமையை மேலும் மோசமாக்கும் என்பது நிச்சயம்.

# சர்வதேச சமரச முயற்சிகளை இலங்கை அரசு ஏற்க வேண்டும்

## அகதிகளுக்கான அமெரிக்கக் குழு கோருகிறது

கொழும்பு, பெப். 10

இலங்கையின் இனப்பிரச்சினையில் சமரச முயற்சியை மேற்கொள்ள சர்வதேச சமூகம் எடுக்கும் நடவடிக்கைகளை கொழும்பு அரசு வரவேற்க வேண்டும். அதனை நிராகரிக்கக் கூடாது ஐ. நா. அமைப்பு, நோர்வே அரசு, சமாதானத்துக்கான கார்ட்டர் நிலையம் மற்றும் இது போன்ற அமைப்புகள் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இணைப்பை ஏற்படுத்த முடியும்.

அகதிகளுக்கான அமெரிக்கக் குழு இலங்கை அரசிடம் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளது.

அகதிகளுக்கான அமெரிக்கக் குழுவினால் இலங்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய சிபார்சுகளில் மற்றும் சில வருமாறு:-

இலங்கை எதிர் நோக்கும் பிரச்சினைகளை இராணுவ ரீதியில் தீர்க்க முடியாது.

குறிப்பிடத்தக்க இராணுவ லாபங்களை இலங்கை அரசு அடைந்தாலும் — தற்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை படையினர் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டு வந்தாலும்—

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் கெரில்லாப் போரை தொடரும் சாத்தியம் உண்டு.

அத்துடன் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தங்களின் குறைபாடுகளுக்கு நிவாரணம் காணப்பட வேண்டும் என்று கோரியே வருவார்கள்.

ஆகவே மோதலுக்கான மூலகாரணத்தைக் கண்டு பிடித்து அதற்கான தீர்வைக் காணுவது குறித்து தீவிரமாக சிந்திக்காத பட்சத்தில் - இம் மோதல் தொடரும் வாய்ப்பே உண்டு.

அரசின் கடும் போக்கு, தலைநகர் கொழும்பில் தமிழர் பெரும் எண்ணிக்கையில் தொடர்ந்தும் கைது செய்யப்படுவது ஆகியன குறித்து இலங்கை மனித உரிமை அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

# இந்திய — இலங்கை ஒப்பந்தம் நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தாது

## வரலாறு காட்டிவிட்டது என்கிறார் காமினி

கொழும்பு. பெப். 10

இந்திய — இலங்கை ஒப்பந்தம் இனப்பிரச்சினைக்கு முக்கியமான தீர்வு ஆகுமென்று நான் கருதினேன். ஆனால் அது நிரந்தரமான தீர்வாக அமையாது என வரலாறு எமக்கு காட்டிவிட்டது.

இவ்வாறு காமினி திஸநாயக்கா 'லங்காதீப' சிங்கள வார இதழுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் முன்னோடியான நீங்கள் இன்று இந்த ஒப்பந்தத்தைப் பற்றி கொண்டிருக்கும் கருத்து என்ன என்ற கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

வெளிநாட்டுப் படை ஒன்றை மீண்டும் இந்த நாட்டுக்கு கொண்டு வர வேண்டிய தேவை இல்லை என்றே எனக்குப் படுகிறது. இது உள்நாட்டுப் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையை எங்கள் நாட்டில் உள்ளேயே முடிந்த அளவு தீர்த்துக் கொள்ள முடியும் என்பதே எனது நம்பிக்கை.

எமது நாட்டில் தற்போது முக்கியமாக உள்ள பிரச்சினை ஈழம் ராஜ்யம் அமைப்பதற்காக நடைபெறும் யுத்தமாகும்.

குடாநாட்டுக்கு வெளியே தமிழ்-சிங்கள மக்கள் மத்தியில் உள்ள தொடர்புகளை பார்க்கும்போது ஜனாதிபதி குறிப்பிட்டது போல இனப்பிரச்சினை உள்ளதா என்பதே ஒரு பிரச்சினையாக இருந்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

## இசை விழா

இளங்கலைஞர் மன்றத்தின் 14 ஆவது ஆண்டு இசைவிழா எதிர் வரும் 12 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை மன்றக் கலாமண்டபத்தில் நடைபெறும்.

தினமும் பிற்பகல் 4 மணியில் இருந்து இரவு 10 மணி வரை பல தரப்பட்ட இசை நிகழ்ச்சிகள் இடம்பெறுவதோடு 500 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் இதில் பங்கு பற்றுவார்கள். (க-17)

## அன்னைபூபதி நினைவு பொது அறிவுத் தேர்வு

யாழ்ப்பாணம். பெப். 10

தற்கொடையாளி அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வுகளுக்குரிய நுழைவு அட்டவணையையும், தேர்வுக் கட்டணத்தையும் எதிர் வரும் 15ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு கோரியுள்ளது.

இதற்கான வழிகாட்டி தற்போது பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது.

கட்டணம் மற்றும் அட்டவணைகளை கோட்டங்கள் ஊடாக தேர்வுப் பணியகத்துக்கு அனுப்பி வைக்கும்படி தேர்வு ஆணையாளரால் பாடசாலைகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# தமிழும் சைவமும் வளர உழைத்தவர் மூதறிஞர்

## இந்து சமயப் பேரவை அனுதாபம்

யாழ்ப்பாணம். பெப். 10

மூதறிஞர் க. சி. குலரத்தினம் ஐயா சைவமும், தமிழும் தமிழ் மக்களின் இரு கண்கள் எனப்போற்றி அவற்றின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியவர்.

சமகால தமிழ், சைவ அறிஞர்களிடையே தர்க்க ரீதியிலும் வரலாற்று அடிப்படையிலும் விடயங்களை விளக்குவதிலும் அவர் சிறந்து விளங்கினார். சிறப்பாக மண்வாசனைச் சொற்களை எடுத்தாள்வதில் அவர் தமது தனித் தன்மையைக் காட்டினார்.

அமரர் மூதறிஞர் க. சி. குலரத்தினத்தின் மறைவு குறித்து யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது இளம் சமுதாயத்தினர் தமிழையும் சைவத்தையும் நன்கு கற்க வேண்டி நூற்றுக்கணக்கான தமிழ் சைவ சமய நூல்களை இலகுவான தமிழ் நடையில் வெளியிட்டவர் —

இலைமறைகாய் போல் இருந்த ஈழத்துத் தமிழ் அறிஞர்களினதும், சைவச் சான்றோர்களினதும் வாழ்க்கை வரலாற்றைத் தேடிக் கண்டு பிடித்து ''தமிழ் வளர்த்த செம்மல்கள்'', ''சைவம் வளர்த்த சான்றோர்'' என்ற நூல் வரிசையினை எழுதி வெளியீடு செய்யும் அரும்பணியில் ஈடுபட்டிருந்தவர் —

இந்த வரிசையில் திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவரின் வரலாறு அவரால் எழுதப்பட்டு நூலுருப் பெறுகையில் இத்துரதிர்ஷ்ட சம்பவம் நடைபெற்றிப்பது பெரும் கவலையைத் தருகின்றது. — என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# புலிகளின் அரசியல் கட்சிக்கு இன்னும் அங்கீகாரம் உண்டு

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு. பெப். 10

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அரசியல் பிரிவு ஒன்று உள்ளது. அது தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்த அங்கீகாரம் இன்னும் செல்லுபடியாகும்.

இவ்வாறு ஜனாதிபதி விஜேதுங்கா கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்தும் விருப்பத்தை அனுராதபுரத்தில் நடந்த கூட்டத்தில் ஜனாதிபதி வெளியிட்டபோது இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள எந்த அமைப்புடனும் எந்த விஷயம் பற்றியும் பேச்சு நடத்த தமது அரசாங்கம் என்றும் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் கூட பேச்சு நடத்த எமக்கு விருப்பம்தான் என்றும் அவர் சொன்னார்.

''எனினும் தீவிரவாதத்தில் நாட்டம் கொண்ட தீவிரவாதிகள் அரசியல் நீரோட்டத்தில் பிரவேசிப்பார்கள் என நாம் எதிர்பார்க்க முடியாது'' என்றும் அவர் கூறினார். (இ-எ)

# மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்க விழா

யாழ்ப்பாணம். பெப். 10

மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் நாற்பதாண்டு மலர் வெளியீடும், சேவை நலம் பாராட்டு விழாவும் எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் சங்க போஷகர் இ. கதிர்காமலிங்கம் தலைமையில் நடைபெறும்.

விழாவில் போஷகர் நம. சிவப்பிரகாசத்துக்கு பேராசிரியர் அ. துரைராஜா, சங்கப் பொருளாளர் க. நடராசா. சங்க உப தலைவர் ச. கார்த்திகேசு ஆகியோர் பொன்னாடை போர்த்தி, பொற்கிளி மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிப்பார்கள்.

தொடர்ந்து சங்கத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரனுக்கு சமூகஜோதி, சமூகச் செம்மல், சேவைச் செம்மல் ஆகிய பட்டங்களும், தங்கப்பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்படும். (க 17-152)

## கப்பல் பயணிகள் கவனத்திற்கு

வாதுவ கப்பலில் பிரயாணம் செய்வதற்கு பெயர் பதிந்தவர்களை நாளை 'நரோமாக்' கப்பலில் காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

நாளை நண்பகல் 12 மணிக்கு அவர்களை பருத்தித்துறை துறைமுகத்தில் சமூகமளிக்கும் படியும் — யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (ஒ-3)

## இலங்கையில்---

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாக இந்த ஆணைக்குழு நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றில், இந்த ஆயுதப் பிணக்குகளுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதாபிமான சட்டங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கோரியது.

1993 ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 49 ஆவது கூட்டத் தொடரில் ''தமிழர்கள் தமது அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அந்தஸ்து உள்ளவர்கள் என்பது அங்கீகரிக்கப்படவேண்டும்'' என 15 அரச சார்பற்ற நிறுவனங்கள் மீண்டும் அவசர வேண்டுகோள் விடுத்தன.

ஆனால் இன்று ஒருவருடத்தின் பின்னர் தமிழர் தாயகத்தின் மீதான பொருளாதாரத் தடை தொடர்கின்றது. அத்துடன் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையும் விமானத் தாக்குதல்களும் தொடர்கின்றன.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்கள் 2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றனர். பிரித்தானியர் வருவதற்கு முன்னரே வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கு தனிராஜ்யம் இருந்துள்ளது — இவ்வாறு அந்தக் கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஒ-5)

## இடை நிலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருடம் ஆண்டு 9 வகுப்பில் மட்டும் அறிமுகப்படுத்தப் படுமா —

அல்லது —

ஆண்டு 10, 11 ஆகிய வகுப்புகளுக்கும் இந்த வருடமே அது அறிமுகப்படுத்தப் படுமா என்பது சுற்றுநிருபத்தில் தெளிவுபடுத்தப்படவில்லை.

### ஆண்டு 9, 10

புதிய திட்டத்தின் படி ஆண்டு 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் மாணவர்கள் பயிலவிருக்கும் பாடங்களும் அவற்றுக்கு வாராந்தம் ஒதுக்கப்பட்டிருக்கும் பாடவேளைகளின் எண்ணிக்கையும் வருமாறு:-

- ★ தாய்மொழி — 4
- ★ ஆங்கிலம் — 4
- ★ கணிதம் — 4
- ★ விஞ்ஞானம் — 4
- ★ சமயம் — 2
- ★ வரலாறு — 3
- ★ தமிழ் இலக்கியம் — 3
- ★ ஆங்கிலஇலக்கியம்— 3
- ★ சமூகக்கல்வி — 4
- ★ அழகியல்/சித்திரம்/சங்கீதம்/நடனம் — 3
- ★ தொழில்சார் கல்வி/விவசாயம் — 3
- ★ பேச்சு மொழி/நவீனமொழி — 3

மொத்தம் — 40

ஆண்டு 9, 10 ஆம் வகுப்புகளுக்கு தற்போதுள்ள பாடங்களுக்கு மேலதிகமாக வரலாறு. தமிழ் இலக்கியம், ஆங்கில இலக்கியம், பேச்சு மொழி அல்லது நவீனமொழி ஆகிய பாடங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

### ஆண்டு 11

ஆண்டு 11 இல் — ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்குத் தோற்றும் — மாணவர்களுக்கான எட்டுப் பாடங்களும் அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட பாடவேளைகளின் எண்ணிக்கையும் வருமாறு:-

- ★ தாய்மொழி — 5
- ★ ஆங்கிலம் — 6
- ★ கணிதம் — 6
- ★ விஞ்ஞானம் — 6
- ★ சமயம் — 2
- ★ வரலாறு — 5
- ★ தமிழ் இலக்கியம் — 5
- ★ ஆங்கில இலக்கியம் — 5

மொத்தம் — 40

தற்போது அழகியல் கல்வி என்ற பாடத்தின் கீழ் சித்திரம் அல்லது நடனம் அல்லது சங்கீதம் அல்லது ஆங்கில இலக்கியம் ஆகியவற்றில் ஒரு பாடத்துக்கு மாணவர்கள் தோற்றி வருகின்றார்கள். இனிமேல் அழகியல் கல்வி என்ற பாடம் இல்லாமல் போக ஆங்கில இலக்கியம் கட்டாய பாடமாக வருகிறது.

தற்போது சமூகக் கல்விப் பாடத்தில் வரலாறு ஒரு பகுதியாக இடம் பெற்றுள்ளது. இனிமேல் சமூகக் கல்வி என்ற பாடம் இல்லாமல் போக வரலாறு ஒரு பாடமாகும்.

தொழிற்கல்வி என்ற பாடத்தின் கீழ் விவசாயம் அல்லது வர்த்தகம் அல்லது மனையியல் அல்லது மரவேலை போன்ற ஒரு பாடத்துக்கு மாணவர்கள் இதுவரை தோற்றி வந்தனர். இனிமேல் தொழிற்கல்வி என்ற பாடம் ஜி. சீ. ஈ. (சாதாரண) தரத்துக்கு ஒரு பாடமாக இருக்காது.

புதிதாக தமிழ் இலக்கியம் கட்டாய பாடமாக அறிமுகப் படுத்தப்படுகிறது.

சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்ட மற்றைய முக்கிய விவரங்கள் வருமாறு:

★ ஆண்டு 9, 10 இல் — இரு வருடங்கள் — பயிலும் பாடங்களையும் —

ஆண்டு 11 வரை — 3 வருடங்கள் — பயிலும் பாடங்களையும் கவனத்தில் கொண்டு பாடவேளைகளை உருவாக்கி நாட்டிற்குப் பொருத்தமான விதத்தில் அதனை மீளமைக்க முடியும்.

★ ஆசிரியர்கள் வழக்கம் போலவும் மாணவர்களின் விருப்புக்கு அமையவும் பேச்சு மொழி. நவீனமொழி. ஆங்கில இலக்கியம் ஆகியனவற்றைத் தேசியக் கல்லூரிகளில் கற்பிக்கலாம். அவ்வாறு அமையாதபோதும் மாணவர்கள் பரீட்சையில் தோற்ற முடியும். குறிப்பிட்ட ஆசிரியர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் அந்தப் பாடவேளைகளில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், தமிழ் இலக்கியம் வரலாறு, தாய்மொழி ஆகியவற்றைப் போதித்த குறித்த ஆண்டில் சமச்சீர் செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ-உ]

# தமிழருக்கு ஈழம் கொடுத்தால் சிங்களவர் கடலில் மூழ்க வேண்டும்

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு. பெப். 10

எமது எதிர்காலச் சந்ததியினருக்கு ஒரே ஒரு தேசம் தான் உண்டு. அதுதான் சிங்களத் தேசம். இத் தேசத்தை நாம் தியாகம் செய்தால் நாம் வாழ எங்கேயும் நமக்கு இடமில்லாத நிலை ஏற்படும். நாம் எல்லோரும் கடலில் தான் மூழ்க வேண்டும்.

உடுநுவர என்னும் இடத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி விஜேதுங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசியதாவது:

விடுதலைப் புலிகளுக்கு கரண்டியும் முள்கரண்டியும் கொடுப்பேன்; கோப்பையைக் கொடுக்கமாட்டேன். இன்னொரு கரண்டி வேண்டும் என்று அவர்கள் கேட்டால் அதனையும் நான் கொடுப்பேன்.

### தமிழர் எப்படி உயிர் பிழைக்கிறார்கள்?

யாழ்ப்பாண மக்கள் எப்படி உயிர் தப்பியுள்ளார்கள்?

தென்பகுதி வளங்களினால் தான் அவர்கள் உயிர் பிழைத்து வாழ்ந்து வருகிறார்கள்.

அவர்கள் தேயிலை, ரப்பர் மற்றும் மிளகு போன்ற பொருள்களை உற்பத்தி செய்வதில்லை.

தெற்கில் இருந்து நாம் எல்லாவற்றையும் அங்கு அனுப்பி வைக்க வேண்டியுள்ளது.

உணவு, மின்சாரம், மருந்து வகைகள், தண்ணீர், தொழில் வாய்ப்புகள் கல்வி வசதிகள் யாவற்றையும் நாம் தெற்கில் இருந்து அனுப்பிக் கொண்டிருக்கின்றோம்.

53 கோடி 60 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை நாம் ஆண்டு[illegible] அங்கு அனுப்பி வருகின்றோம்.

இருந்தும் அவர்கள் ஈழம் பற்றித் தான் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஈழம் வழங்கப்படமாட்டாது.

### எனது உயிரை கொடுக்கத் தயார்

நான் இப்படிச் சொன்னால் அவர்கள் என்னைச் சுடுவார்கள். எனது உயிரைத் தியாகம் செய்ய நான் தயாராக உள்ளேன். நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்கும் வரை அவர்களால் ஈழம் பெற முடியாது.

கிழக்கு தங்கள் தாயகம் என்று அவர்கள் கூறுகின்றார்கள். அப்படியானால் விடுதலைப் புலிகள் ஏன் அங்கு தேர்தலில் போட்டியிடவில்லை? இது ஒரு கேலிக்கூத்து. இது இனப்பிரச்சினை [illegible]

துப்பாக்கியின் பலத்தால் நாட்டைப் பிரிக்க விடுதலைப் புலிகள் முயற்சிக்கின்றார்கள்.

இன்னொரு நாட்டிடம் இந்த நாட்டைக்கொடுக்கவும் தீவிரவாதிகள் முயற்சிக்கின்றார்கள் இப்படி எல்லாம் செய்ய அவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

### யார் தீவிரவாதி? யார் குடிமகன்?

குடிமக்கள் மத்தியில் தீவிரவாதிகள் வாழ்கின்றனர். யார் தீவிரவாதி, யார் குடிமகன் என்பதை எம்மால் அடையாளம் காணமுடியாது. அடையாளம் காணுவதற்கு அவர்கள் தங்கள் உடம்பில் பச்சை குத்தியிருக்கவில்லை. அது கடினம் இருப்பினும் தீவிரவாதத்தை வெகுவிரைவில் நாம் ஒழிப்போம்.

எமது நாடு பல தடவைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இருந்தும் எம் நாடு இவற்றில் இருந்து தப்பி பிளவுபடாத நிலையில் எதிர்கால சந்ததியினரிடம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது.

தீவிரவாதிகளுக்கு ஈழத்தை கொடுத்து. தெற்கில் உள்ள தமிழர்கள் எல்லோரையும் அங்கு அனுப்பிவைத்துவிட்டால், தமிழர்கள் அங்கு எப்படி பிழைத்துக்கொள்வார்கள்?

அவர்கள் தங்கள் உயிர்களை காப்பாற்றுவதற்காக மண்ணைத்தான் சாப்பிட வேண்டியிருக்கும்.

அவர்களை ஈழம் பெற அனுமதித்தால் மத்திய மாகாணத்தில் உள்ள தமிழர்களும் தனிநாடு கோருவார்கள். அவர்களுக்கும் நாம் ஒரு நாடு கொடுக்கப் போகிறோமா?

மேற்கு நாட்டு ஆக்கிரமிப்பாளர்களால் பறிக்கப்பட்ட நம்முன்னோர்களின் நிலங்கள் இவையாகும்.

ஜனநாயக நடைமுறைக்கு வர விருப்பம் தெரிவிக்கும் வரை விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்தாது

ஜனநாயக நடைமுறைக்கு வர விருப்பம் தெரிவிப்பின் அவர்கள் தேர்தலில் போட்டியிட்டிருக்க முடியுமே

தேர்தலில் போட்டியிட முன்வராத விடுதலைப் புலிகளுடன் நாம் ஏன் பேச்சு நடத்த வேண்டும்!

இப்படி அவர் கூறினார்.

(இந்த உரையின் ஒரு பகுதி ஏற்கனவே உதயனில் வெளிவந்துள்ளது) (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி

## ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்தச் சபை

பல்கலைப் புலவர், சைவப் புலவர், மூதறிஞர் க. சி. குலரத்தினம் ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல எம்பிரானைப் பிரார்த்திக்கின்றோம்.

டி சபையினர்.

திருநெல்வேலி.
09-02-1994. (29358)

---

பருத்தித்துறை - கோட்டுவாசல்

## அருள்மிகு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தானம்

## அபிராமிப்பட்டர் விழா

**10 - 2 - 1994**

மாலை 4 — 30 மணிக்கு விஷேட அபிஷேக ஆராதனை
மாலை 5 — 00 மணிக்கு பூஜை

இரவு நிகழ்ச்சிகள்

இரவு 6 — 00 மணிக்கு மங்கள இசை
பருத்தித்துறை தவில் சகோதரர்கள்
திரு M.S. விஜயகுமார், திரு. M.S. சதீஸ்குமார்
நாதஸ்வரம் இசை ஞானவாருதி
திரு. V K. நம்பிராசா, திரு S. செல்வம்

இரவு 6 — 30 மணிக்கு அருள் ஆசிச்செய்தி
தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் J.P.

அருள் ஆசிச் செய்தியும், அருள் ஆசியும் வழங்குபவர்
சிவஸ்ரீ இ. சுந்தரேச குருக்கள் அவர்கள்
(ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை)

வரவேற்புரை: திரு. ஆ. வ. தங்கராசா அவர்கள்
(முன்னைநாள் வடமராட்சி, உதவிக் கல்விப்பணிப்பாளர்)

இரவு 7 — 00 மணிக்கு சிறப்புரை:
தலைப்பு: அம்பிகையின் அருள்நலம்
வழங்குபவர்; திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்
(யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர்)

இரவு 7 — 30 மணிக்கு இசை ஆராதனை
அபிராமி அந்தாதி இன்னிசை
வழங்குபவர்: இன்னிசை வேந்தர் சங்கீத பூஷணம்
திரு, பொன் சுந்தரலிங்கம் குழுவினர்
(பாட்டு)

மிருதங்கம்: இசைஞான திலகம் திரு. S. மகேந்திரன்
வயலின்; இசைஞான திலகம் திரு V.R. ராதாகிருஸ்ணன்
கெஞ்சிரா: சங்கீத இரத்தினம் திரு. S. துரைராசா.
கடம்: வித்துவான் திரு. சதா வேல்மாறன்.
ஒலி, ஒளி: வாணி சவுண்ட், பருத்தித்துறை.

- விழா உபயகாரர்.

(ஓ-7100)

---

## முக்கிய அறிவித்தல்

### C. C. C. கிளினிக்
[City Clinical Consultation]

ஹோட்டல் ஞானம்ஸில் இதுவரை மேல்மாடியில் இயங்கி வந்த மேற்படி எமது கிளினிக் நோயாளர்களின் வசதியை முன்னிட்டு கீழ்மாடிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதைச் சகலருக்கும் அறியத்தருகிறோம்.

தொடர்ந்தும் எமது கிளினிக்கில், கண், பொது வைத்தியம் மற்றும் சகல வைத்திய நிபுணர் ஆலோசனைகளும் வழமைபோல் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

நன்றி!

உரிமையாளர்,
C. C. C கிளினிக்,
ஹோட்டல் ஞானம்ஸ்,
மனிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/7230)

---

## கட்டணக் குறைப்பு

எனது வானில் வரும் கொக்குவில் ஆண்டு 8 மாணவிகளிற்கும் கோண்டாவில், இணுவில், உடுவில் மாணவிகளிற்கும் அறியத் தருவது. இது வரையிலும் நான் ரூ 400 ஐ பஸ் கட்டணமாக பெற்றுக் கொண்டேன். 1994 ஆம் ஆண்டு பங்குனி 1 ஆம் திகதியில் இருந்து ரூ 200ஐ உங்களிடம் இருந்து பெற்றுக் கொள்வேன் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறேன்.

இப்படிக்கு
க செல்வரட்ணம்
[உடையார்]
30 — 6214
தமிழீழப் பாடசாலைச் சேவை

(29364)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

---

## யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியம்
## JAFFNA CHRISTIAN UNION
## கூட்டு பரி. நற்கருணை ஆராதனை

பங்கு கொள்வோர்:-
அதி. வண. கெனத் பெர்னான்டோ
அதி வண. கலாநிதி ஜெபநேசன்
வண. கலாநிதி கிங்ஸ்லி முத்தையா

அருளுரை:-
அருட் கலாநிதி ரியஸி பெரேரா

காலம்:-
வெள்ளிக்கிழமை 11—02—94 காலை 9 மணி

இடம்:-
கிறிஸ்த சேவா ஆச்சிரமம், மருதனார்மடம்

ஆராதனையின் பின்னர் மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் கருத்தரங்கு மு ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்:

செயலாளர்.

(29368)

---

## மானிப்பாய் மகளிர் கல்லூரி
## பரிசளிப்பு விழா

12-02-94 சனிக்கிழமை முற்பகல் 9 மணி

பிரதம விருந்தினர்:-
பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள்
(துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்)

விஷேட விருந்தினர்:-
திருமதி R. இருதயநாதன்
(உதவிக் கல்விப்பணிப்பாளர் சண்டிலிப்பாய் வலயம்)

சிறப்பு விருந்தினர்:-
திரு சிவா. இராஜேந்திரர்
(J.P. சட்டத்தரணி)

பரிசில் வழங்கல்:-
திருமதி இ துரைராஜா அவர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர் - ஆசிரியர்கள்
மாணவிகள்

(29360)

---

## மனைப் பொருளியல் வகுப்புக்கள்
## (DIPLOMA IN HOME ECONOMICS)

★ Dress Making — ஆடை அலங்காரம்
★ Food & Cookery — சிற்றுண்டி தயாரித்தல்
★ Hair Dressing — தலையலங்காரம்
★ Cake Decoration (Icing) — கேக் ஐசிங்
★ Handicraft — கைவேலை
★ Macrame — மக்ரம்

அத்துடன்

★ Flower Making — மலர் அமைப்பும் அலங்காரமும்

வகுப்புகள் ஆரம்பம்:- **14 - 2 - 1994**

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE.**
14 ST PETER'S LANE, JAFFNA.
[சி-7228]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 — 06 — 1901
மறைவு: 22 — 01 — 1993

## அமரர் வல்லிபுரம் சேதுகாவலர்

திதி: 10 — 02 — 1994

தந்தை என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுத்தவரே
தன்னலம் பாராது தளர்வின்றி உழைத்தவரே
தனத்துடன் தன்னம்பிக்கையும் சேர்ந்தளித்தவரே
தந்தை சொல் மிக்க மந்திரம்
இல்லையென்று தரணியிலே வாழ்வைத்தவரே
நீங்கள் மறைந்தாலும் மறையவில்லை நினைவுகள்
நினைப்போம் நிறைவேற்றுவோம்;
நின்பணிகளை தொடர்ந்தே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முத்துமாரி அம்மனை இறைஞ்சுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்

கைதடி கிழக்கு, கைதடி. (29381)

---

## ஆலயங்களில்

பருத்தித்துறை - கோட்டுவாசல் அருள்மிகு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தானத்தில் அபிராமிப்பட்டர் விழா இன்று வியாழக்கிழமை நடைபெறும்.

மாலை 4 - 30 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் விழா ஆரம்பமாகும்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான சிவஸ்ரீ இ. சுந்தரேசக்குருக்கள் ஆகியோரின் அருள் ஆசியும் இடம்பெறும். (க-17)

★ ★ ★

கரவெட்டி கிழக்கு கிழவி தோட்டம் விக்ன விநாயகப் பெருமானுக்கு உருவாக்கப்படும் தேருக்கு அச்சுக்கோர்க்கும் வைபவம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணியளவில் ஆலயக் குருக்கள் யோ. கேதீஸ்வரசர்மா தலைமையில் நடைபெறும். (க-17)

★ ★ ★

கன்னாகம் குராவத்தை முத்துமாரியம்மன் கோயிலில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு அபிராமிப் பட்டர் விழா நடைபெறும். (க-89)

★ ★ ★

சண்டிலிப்பாய் மாகியம்பதி அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் அபிராமி அந்தாதி முற்றோதலும் தவத்திரு சண்முகவடிவேல் சுவாமிகளின் முற்றோதலும் இடம்பெறும். (க-89)

★ ★ ★

யாழ். மடம் வீதியிலுள்ள திரு இருதய ஆண்டவர் திருத்தல ஐந்தாம் ஆண்டு நிறைவுத் திருவிழா இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

நிறைவுத் திருவிழாத் திருப்பலியை யாழ். பேராலய பங்குத்தந்தை வண. அன்ரன் ராசநாயகம் அடிகள் நிறைவேற்றுவார். (க-51)

★ ★ ★

அகில இலங்கை விஸ்வகர்ம சங்கம் வருடா வருடம் திருக்கேதீஸ்வரத்தில் நடக்கும் தை அமாவாசைத் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் யாழ் வண்ணை நாச்சிமார் கோயிலில் நடைபெறும். (க-17)

★ ★ ★

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு அபிராமி பட்டர் விழாவும், தை அமாவாசை உற்சவமும் நடைபெறும். [ஒ-3]

★ ★ ★

உரும்பராய் வடக்கு பேச்சியம்மன் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு அபிராமிப்பட்டர் விழா நடைபெறும்.

பிரம்மஸ்ரீ நா. விக்கினேஸ்வரக் குருக்கள் அபிராமி பட்டர் பற்றி சொற்பொழிவு ஆற்றுவார். (ஒ-154)

---

**SCIENCE COLLEGE**
பெருமாள் கோவில் வீதி
யாழ்ப்பாணம.

✻ PHYSICS ✻
**MR. SOORIYA**
B Sc. (Hons) Dip In. Ed.

ஆரம்பம்:
**12 - 02 - 94**
4-15 p.m.

94 A/L Theory: 4-15p.m
94 A/L மீட்டல்: 5-15 p m.
[சி-7309]

---

**PERSONAL**
**NEW SCIENCE CENTRE**
JAFFNA
**SPOKEN ENGLISH**
With
**GRAMMAR**
By
Mr M A. Hari
B. A. Dip In Eng.
புதிய பிரிவு ஆரம்பம்
12-02-94 - 1 P.M.
(சி/ 7306)

---

## பொதுக் கூட்டம்

யா / அளவெட்டி அருணோதயக் கல்லூரி
பாடசாலை

## அபிவிருத்திச் சபைக் கூட்டமும் பழைய மாணவர் சங்கக் கூட்டமும்

மேற்படி சபைகளின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 12-2-94 சனிக்கிழமை அபிவிருத்திச் சபைக் கூட்டம் காலை 9 00 மணிக்கும் பழைய மாணவர் சங்கக் கூட்டம் மு. ப. 11.30 மணிக்கும் யா / அருணோதயக் கல்லூரி (மருதனாமடத்தில்) நடைபெறவுள்ளன.

பெற்றோர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வை. பாலசுப்பிரமணியம், செயலர் [பா. அ. ச]
அ. சிறிக்குமாரன் [தலைவர்]
[29363]

---

## மரண அறிவித்தல்கள்

### யேக்கப் அன்னம்மா

மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட யேக்கப் அன்னம்மா 9 - 2 - 94 புதன்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை யேக்கப்பின் அன்பு மனைவியும், யேக்கப் மரியநாயகம் [மிருசுவில்] அருட் சகோதரி மேரி பொஸ்கோ [யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்], அருட் சகோதரி ஹென்றிபெல் A. C. [தாளையடி], அருட்திரு திருச்செல்வம் அ. ம தி. [பதுளை] அருட்திரு J. நிக்கிலாஸ் O L R, யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 11 - 2 - 94 வெள்ளிக்கிழமை இல. 248, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்திலிருந்து மு. ப. 7 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடைக்கல அன்னை ஆலயத்தில் மு. ப. 8 30 வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தொடர்ந்து இரங்கல் திருப்பலியின் பின் நல்லடக்கத்துக்காக புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருட்திரு J. நிக்கலாஸ் (O. L. R)
[மகன்]
[29366]

### செல்வி பியூலா எப்சிபா

குருநகரைச் சேர்ந்த சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி செல்வி பியூலா எப்சிபா ஞாயிற்றுக்கிழமை (6.2.94) கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் செபஸ்ரியன் ஜோசப்பிள்ளை (யோசே) மரியா தம்பதிகளின் அன்பு மகளும், சுமதி, ஷாயா, நிதிலா, ரமா, ஸ்ரீபன், ஸ்ரெனோ ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது பூதவுடல் அடக்க ஆராதனைக்காக வியாழக்கிழமை இன்று (10 2.94) காலை 9 00 மணியளவில் 101, பிரதான வீதியிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து வசந்தபுரத்திலுள்ள இலங்கை பெந்தேகோஸ்தே சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், விசுவாசிகள், கல்லூரி மாணவிகளும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்
செபஸ்ரியன் ஜோசப்பிள்ளை
(யோசே)
தகப்பன்
101 பிரதான வீதி.
யாழ்ப்பாணம். (29355)

### பரமேஸ்வரி துரைராசா

தும்பளையைச் சேர்ந்த பரமேஸ்வரி துரைராசா (8- 2- 94) அன்று காலமானார்.

இவர் காலஞ் சென்ற பொ. கதிரவேற்பிள்ளை (முதலியார்), புவனேஸ்வரியின் மூத்த மகளும், சே. இராமசாமி—, சிவக்கொழுந்துவின் அருமை மருமகளும், இ துரைராசாவின் (முன்னை நாள் HNB முகாமையாளர்) ஆருயிர் மனைவியும்; சிவராசா (HNB), செல்வராசா (HNB), யோகராசா (கனடா), தேவராசா (UK) ஆகியோரின் அருமைத் தாயாரும்; சி. வசந்தியின் மாமியும்; சி. நிருஷா, சி அனோஜன் ஆகியோரின் பேர்த்தியும்; க நடேசன், க. ஆனந்த நடேசன், க. தில்லை நடேசன், திருமதி க சிவாம்பிகை, திருமதி பொ. பர்வதபத்தினிதேவி ஆகியோரின சகோதரியும்; ந. இலட்சுமிப்பிள்ளை, ஆ. செல்லம்மா, இ. சரோஜினி, செ. கந்தசாமி, ப. பொன்னையா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
க முருகேசு
(சிறியதந்தை)
நெல்லண்டை வீதி,
தும்பளை,
பருத்தித்துறை (29356)

### வேலுப்பிள்ளை செல்லம்மா

மாதகல் அந்தோனியார் வீதியில் வசித்தவரும் தற்போது யாழ் வண்ணார்பண்ணை முருகமூர்த்திகோயில் வீதியில் வசித்து வந்தவருமாகிய வேலுப்பிள்ளை செல்லம்மா காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பூமணி, காலஞ்சென்ற திருமணி, தங்கரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும், சபாரத்தினம், இராசையா, காலஞ்சென்ற கோபாலு ஆகியோரின் அன்பு மாமியாரும், மாசிலாமணி, கதிரவேலு, காலஞ்சென்ற பாக்கியம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பத்மா, திருமதி சந்திரா பத்மநாதன், செந்தில் செல்வன் (டோகா), கலைச்செல்வன் (டோகா), திருமதி கமலாதேவி சிவகுமார் (பிரான்ஸ்), குகபாலன், சிவஸ்ரீ முருகன் (சுவிஸ்), திருமதி பத்மாவதி குணதாசன், சரோஜினிதேவி, சாவித்திரி, ராதா, ரஞ்சன், முரளிதரன், ராஜேஸ்வரி, வாமதேவன், நளினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை (10-2-94) பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. பத்மநாதன்
வண்ணார்பண்ணை. (29369)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org